ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
අති විශෙෂ
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை
அதி விசேஷமானது
අංක 2233/19 - 2021 ජූනි මස 22 වැනි අඟහරුවාදා - 2021.06.22
*2233/19 ஆம் இலக்கம் - 2021 ஆம் ஆண்டு யூன் மாதம் 22 ஆந் திகதி செவ்வாய்க்கிழமை*
(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**5 ஆவது திருத்தம்**

**இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு**

*இல. 1925/59 மற்றும் 2015, யூலை 29 ஆந் திகதிய, இல. 1996/25 மற்றும் 2016, திசெம்பர் 06 ஆந் திகதிய, இல. 2082/59 மற்றும் 2018, ஓகத்து 03 ஆந் திகதிய, இல. 2137/89 மற்றும் 2019, ஓகத்து 23 ஆந் திகதிய, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல்களினால் திருத்தப்பட்ட, இல. 1877/27 மற்றும் 2014, ஓகத்து 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் பிரசுரிக்கப்பட்ட, இலங்கை விஞ்ஞான சேவையின் சேவைப் பிரமாணக் குறிப்பு பின்வருமாறு திருத்தியமைக்கப்படுவதோடு, அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏனைய விடயங்கள் மற்றும் நிபந்தனைகள் மாற்றமின்றி தொடர்ந்தும் செயல்வலுப்பெறும்.*

*அரசாங்க சேவை ஆணைக்குழுவின் பணிப்பிற்கமைய,*

**எம். ஏ. பி. தயா செனரத்,**
செயலாளர்,
*அரசாங்க சேவை ஆணைக்குழு.*

*2021, மார்ச் 16.*

7.2.2.4. **உடற் தகைமைகள்** : இலங்கையின் எப்பாகத்திலும் சேவையாற்றுவதற்கும் தனது பதவியின் வகிபாகம் மற்றும் கடமைப் பொறுப்புக்களை சிறந்த முறையில் நிறைவேற்றுவதற்கும் தேவையான போதியளவு உடல் மற்றும் உள ரீதியான தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

7.2.2.5 **வேறு தகைமைகள்** : தொடர் இல. பிரிவு iv நீக்கப்படுகின்றது.

*7.2.3* **வயது**:

7.2.3.2 உச்ச வயதெல்லை : 35 வருடங்கள்

1A - G 34470 — 30 (2021/06)
*இவ் அதிவிசேட வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

7.2.4 **ஆட்சேர்ப்பு முறை** : எழுத்து மூலப் பரீட்சை மற்றும் பொதுவான நேர்முகப் பரீட்சையின் பெறுபேறுகளுக்கு அமைய-

எழுத்து மூலப் பரீட்சையில் சித்தியடைந்து ஏற்புடைய தகைமைகளைப் பூர்த்தி செய்துள்ள பரீட்சார்த்திகள் திறமை ஒழுங்கு வரிசை மற்றும் விருப்பத் தெரிவைக் கருத்திற் கொண்டு ஆட்சேர்க்கப்படுவர். பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்படும் பரீட்சார்த்திகளின் எண்ணிக்கை அரசாங்க சேவை ஆணைக்குழுவினால் தீர்மானிக்கப்படும்.

7.2.4.1. **எழுத்து மூலப் பரீட்சை** :

திறந்த பிரிவின் கீழ் ஆட்சேர்ப்பதற்கான ஏற்புடைய எழுத்துமூலப் போட்டிப் பரீட்சையுடன் தொடர்புடைய விடயங்கள் 02 ஆவது பின்னிணைப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.

7.2.4.3 பொதுவான நேர்முகப் பரீட்சை : தகைமைகள் மாத்திரமே பரீட்சிக்கப்படுவதோடு, புள்ளிகள் வழங்கப்படமாட்டாது.

7.3.2.5

2. அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

10.1.1.1

(iv) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

10.2.1.1

(ii) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

10.3.1

(v) அரசாங்க சேவை ஆணைக்குழுவின் சுற்றறிக்கை இல. 01/ 2020 இல் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளுக்கு அமைவாக ஒழுக்காற்றுத் தண்டனையொன்றைப் பெற்றிருத்தல் ஆகாது.

**குறிப்பு**.- இலங்கை விஞ்ஞான சேவையின் அனைத்து அனுமதிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டங்களிலும் குறிப்பிடப்பட்டுள்ள மேற்படி திருத்தங்களுக்குரிய ஏற்பாடுகள் இலங்கை விஞ்ஞான சேவை பிரமாணக் குறிப்புக்கு அமைய திருத்தியமைக்கப்பட்டுள்ளதாக கருதப்படுதல் வேண்டும்.

2 ஆம் பின்னிணைப்பு நீக்கப்பட்டு அதற்குப் பகரமாக பின்வரும் 2 ஆம் பின்னிணைப்பு பதிலீடு செய்யப்படுகின்றது.

## 2 ஆம் பின்னிணைப்பு

திறந்தப் பிரிவின் கீழ் இலங்கை விஞ்ஞான சேவையின் தரம் (III) பதவிக்கு ஆட்சேர்ப்பதற்காக நடாத்தப்படும் எழுத்து மூல போட்டிப் பரீட்சை

அரசாங்க நிறைவேற்றுநர் வகுதியின் தரம் III வெற்றிடங்களை நிரப்புவதற்கான பொதுப் போட்டிப் பரீட்சை இதற்கு ஏற்புடையதாகும். இந்தப் பரீட்சை, பரீட்சை ஆணையாளர் நாயகத்தினால் வருடாந்தம் நடாத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.

01. **பரீட்சைத் திட்டம்** :

| வினாப் பத்திரம் | காலம் | வினாப் பத்திரத்தின் தன்மை | சித்தியெய்துவதற்கான புள்ளிகள் |
|---|---|---|---|
| நுண்ணறிவுப் பரீட்சை | 1 1/2 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், பல்தேர்வு வினாக்கள் மற்றும்/ அல்லது சுருக்க வினாக்களைக் கொண்டிருக்கும். | 40 |
| கிரகித்தல் | 02 மணித்தியாலங்கள் | 100 புள்ளிகள், பல்தேர்வு வினாக்கள் மற்றும்/ அல்லது சுருக்க வினாக்களைக் கொண்டிருக்கும். | 40 |

*02.* **பாடவிதானம்**

***நுண்ணறிவுப் பரீட்சை***

*பரீட்சார்த்தியின் தர்க்கிக்கும் ஆற்றல், பிரதியிடல், பொருட்கோடல், தொடர்பு காணல், பெயர்ப்பு, பிரச்சினைகளைத் தீர்க்கும் இயலுமை, காரண காரிய தொடர்புகளை புரிந்து கொள்ளல், எதிர்வுகூறல், தகவல்களை ஒழுங்கமைத்தல், வடிவங்களை இனங்காணல் மற்றும் ஆலோசனைகளை பின்பற்றுதல் முதலிய இயலுமைகளை அளவிடுவதற்காக வடிவமைக்கப்பட்ட பல்தேர்வு வினாக்களைக் கொண்டது.*

***கிரகித்தல்***

*பரீட்சார்த்தியிடம் காணப்படும் விடயங்களை புரிந்துகொள்ளும் இயலுமை, தொடர்பாடல் திறன், சாரம்சப்படுத்தல், விவரித்தல் மற்றும் ஆக்கத்திறன் ஆகிய திறன்களை அளவிட வடிவமைக்கப்பட்ட புறவய வினாக்களைக் கொண்டது.*

*03.* **பரீட்சையின் ஊடக மொழி**

I. *இந்தப் பரீட்சை சிங்களம், தமிழ் மற்றும் ஆங்கில மொழி மூலம் நடைபெறும்.*

II. *பரீட்சார்த்திகள் தாம் விரும்பும் ஒரு மொழியில் பரீட்சைக்குத் தோற்ற முடியும்.*

III. *பரீட்சார்த்திகள் இந்தப் பரீட்சையின் அனைத்து வினாப்பத்திரங்களுக்கும் தோற்ற வேண்டுமென்பதோடு, அதன் பொருட்டு ஒரு ஊடக மொழியை மாத்திரம் தெரிவு செய்தல் வேண்டும்.*

IV. *பரீட்சார்த்தியொருவருக்கு தனது விண்ணப்பத்திலுள்ள பரீட்சைக்கான ஊடக மொழியை மாற்றுவதற்கு அனுமதி வழங்கப்படமாட்டாது.*

*06-415*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*